2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் சொன்னதைத்தான் நான் பதிவு செய்துகொண்டுவிட்டேனே. (குறுக்கீடு)

(ஆ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை—தொடர்ச்சி.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். திரு. துரைமுருகன், நீங்கள் சொன்னதை நான் பதிவு செய்துகொண்டுவிட்டேன். (குறுக்கீடு) பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு). நீங்களே அதைப்பற்றிச் சொல்லியிருக்கலாம். திரு. வேலுவிடம் கொடுத்து, சொல்லச் சொல்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு அமைப்பாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து மனு கொடுக்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு பேசியவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. சத்துணவு குறித்த பிரச்சினையைப்பற்றி மட்டும் மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் என்பதை மட்டும் சொல்லி உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுடைய கோரிக்கை என்னவென்று சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு அமைப்பாளர்கள் ** அவர்கள் போராடியிருக்கிறார்கள். அதேபோல. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு அவர்கள் அவையின் கவனத்தை ஈர்த்திருந்தால் பரவாயில்லை. அவர் வேறு ஏதேதோ பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசுகிறார். (குறுக்கீடு) சத்துணவு அமைப்பாளர்களுடைய பிரச்சினைகளை, கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சொன்னால் நான் பதிவு செய்துகொள்வேன். திரு. எ.வ. வேலு அவர்கள் வேறு ஏதேதோ பிரச்சினைகளையெல்லாம் பேசுகின்றார். (குறுக்கீடுகள்) வேறு பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) இருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள். இந்த சப்ஜெக்ட் குறித்தா அல்லது வேறு சப்ஜெக்ட் குறித்து சொல்லப்போகிறீர்களா? இதே சப்ஜெக்ட் குறித்தது என்றால், அவையின் கவனத்தை ஈர்த்துவிட்டு, உட்காருங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் ** குறித்து . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் பேசக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

பிற்பகல் 12–20

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—*தொடர்ச்சி*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா தண்ணீர் தரமாட்டேன் என்று கை விரித்துவிட்டது. நேற்று நடந்த கூட்டத்தில் தண்ணீர் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன், நீங்கள் உட்காருங்கள். அதுபற்றி பிறகு பேசலாம். இப்போது நீங்கள் உட்காருங்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*